கடவுள் நம் மூலம் அற்புதங்களைச் செய்யும்போது கூட, கடுகு விதை அளவிலான நம்பிக்கையுடன் கடவுளின் திட்டங்களில் நமது பங்கு அவர் நமக்களித்த அருள் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அதற்கு மேல் எதுவும் குறைவுமில்லை, அதிகமுமில்லை. நாம் கடவுளுடன் ஒத்துழைக்கும்போது, நாம் உண்மையுள்ள பணியாளராக, கடவுளுக்கு நாம் செய்யும் கடமையைத் தவிர வேறொன்றுமில்லை. மேலும் கடவுளுக்குப் பணி செய்வதில் அவருடைய ஊழியர்களாக நாம் கொடுத்தவை நூறு மடங்கு பலன்களைத் தரும் என்று நம்புவதற்கு நம்முடைய நம்பிக்கை நமக்கு உதவுகிறது. (லொயோலா அச்சகத்தின் வலைத்தளத்திலிருந்து)

இந்த மனநிலையுடன் தான் திருஅவையில் உள்ள அனைத்துத் தலைவர்களும் பணி செய்ய அழைக்கப்படுகிறார்கள். மத்தேயு 20:25-26 இயேசு கூறுகிறார். "பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். உயர்குடி மக்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள், இதை நீங்கள் அறிவீர்கள்... உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும்.."

இன்று உலக புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளின் ஞாயிறை அனுசரிக்கிறோம். ஜூலை 25 அன்று திருத்தந்தை 14 ஆம் லியோ தனது அண்மைய செய்தியில் போர்கள், வன்முறை மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகளால் தற்போதைய உலகளாவிய சூழ்நிலையைப் பற்றி தம் கவலையைத் தெரிவிக்கிறார். இது மில்லியன் கணக்கான மக்களை தங்கள் தாயகத்தை விட்டு வேறு இடங்களில் அடைக்கலம் தேடி வெளியேறக் கட்டாயப்படுத்துகிறது. போர் மற்றும் அநீதியால் இருண்டுபோன இந்த உலகில் அனைத்தும் தொலைந்துபோனதாகத் தோன்றினாலும், புலம்பெயர்ந்தோரும் அகதிகளும் எதிர்நோக்கின் தூதுவர்களாக நிற்கிறார்கள். அவர்களின் துணிவும், விடாமுயற்சியும், நம் கண்களால் காணக்கூடியதையும் தாண்டிப் பார்க்கும் ஒரு நம்பிக்கைக்கு ஒரு வீர சான்றாகும். மேலும் பல்வேறு சமகால இடப்பெயர்வு பாதைகளில் மரணத்தை எதிர்க்கும் வலிமையை அவர்களுக்கு அளிக்கிறது.

நாம் வாழ்க்கையில் பயணிக்கும்போது, கடவுளுக்கும் ஒருவர் மற்றவருக்கும் உலகிற்கு நம்பிக்கையைக் கொண்டுவரும் பணியில் உண்மையுள்ள பொறுப்பாளர்களாக நம்மால் தொடர்ந்து இருக்கமுடியும் என்று மன்றாடுவோம். அநீதி நமக்கு வந்தாலும், முதல் வாசகத்தில் ஆண்டவர் கூறும் வாக்குறுதியைப் பற்றிக்கொள்வோம். "...அது காலந்தாழ்த்தி வருவதாகத் தோன்றினால், எதிர்பார்த்துக் காத்திரு, அது நிறைவேறியே தீரும்" ✣

கடுகு விதை மிகவும் சிறியது, ஆனால் இயேசு இந்த அளவு சிறியதாக இருந்தாலும், உண்மையானது, நேர்மையானது; மனிதனால் சாத்தியமற்றதாகத் தோன்றினாலும், நினைத்துப் பார்க்கமுடியாததை அடையப் போதுமானது.

திருத்தந்தை பிரான்சிஸ்

### இன்றைய இறைவார்த்தை:

அபாக்கூக்கு 1: 2-3, 2:2-4

திருப்பாடல்: 95: 1-2, 6-9

2 தீமோத்தேயு: 1: 6-8, 13-14

லூக்கா 17: 5-10

INTERNAL CIRCULATION ONLY
BUL 40/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org


# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 27 ஆம் ஞாயிறு | 5 அக்டோபர் 2025

**(உலக புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தினம்)**


**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**



மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:
சமுதாயம் (இறைவாக்குரைத்தல்) நற்செய்தி மதிப்பீடுகளை வலுப்படுத்த அழைப்பு

# சேவை செய்யும் நம்பிக்கை

இன்றைய நற்செய்தியில் தங்களுடைய நம்பிக்கையை மிகுதியாக்குமாறு திருத்தூதர்கள் ஆண்டவரிடம் கேட்பதை நாம் வாசிக்கிறோம். இது இயேசுவை நம்பிக்கை மற்றும் கடவுளுக்குப் பணி செய்வதைப் பற்றி கற்பிக்கத் தூண்டுகிறது. இது அவருடைய சீடர்களாக இருப்பதன் அர்த்தம் பற்றிய உரையாடல். நம்பிக்கை எவ்வளவு சிறியதாக இருந்தாலும், இயேசுவின் சீடர்களாக அற்புதமான செயல்களைச் செய்ய நமக்கு உதவும் என்று இயேசு நமக்கு உறுதியளிக்கிறார். ஆனால் கடவுளின் திட்டங்களில் நமது இடத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும் என்று இயேசு எச்சரிக்கிறார். கடவுளின் ஊழியர்களாகவும் நாம் அவரின் திட்டங்களையும் புரிந்துகொள்ள வேண்டும்.